செய்தி வெளியீடு எண்:140 நாள் : 01.03.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (1.3.2016) தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகரின் சுற்றுப்புற காற்று மாசின் அளவினை தொடர்ந்து கண்காணிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவிலான நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று மாசு கண்காணிக்கும் நிலைய வாகனத்தின் சேவையினை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த நடமாடும் காற்று கண்காணிப்பு நிலையத்தின் மூலம் சுற்றுப்புற காற்றில் கலந்துள்ள சல்பர் டை ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு, அமோனியா, ஒசோன், கார்பன் மோனாக்சைடு, பென்சீன் போன்ற வாயுக்களின் அளவையும் மற்றும் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் மற்றும் 2.5 மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள நுண்துகள்களையும் கண்டறியலாம். மேலும், வானிலை தொடர்பான விபரங்களை அறியும் வானிலை கண்காணிப்பு கருவிகளும், சென்னை மாநகரின் குறிப்பிட்ட இடங்களில், காற்று மாசின் அளவினை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்காகவும், தீபாவளி, போகி போன்ற பண்டிகை நாட்களில், காற்றின் தன்மையினை 24 மணி நேரமும் கண்காணிக்கவும், விபத்துகள், புகார்கள், நீதிமன்ற வழக்குகள் போன்றவற்றிற்கு அந்தந்த குறிப்பிட்ட இடத்திலேயே காற்றின் தரத்தினை ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்யும் வகையிலும் இந்த நடமாடும் நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுச்சூழல் குறித்த புகார்களையும், தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசு குறித்த புகார்களையும் பொதுமக்கள் இணைய வழி மூலம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு தெரிவிக்கவும், புகார் மீது நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு இணையதளம் மூலம் தகவல் அனுப்பிடும் வகையிலும், 10 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள்;

தொழிற்சாலைகள், தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அனுமதியை பெறும் விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக சமர்ப்பித்து, அதனை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பரிசீலனை செய்து, அனுமதியையும், இணையம் மூலமாகவே வழங்குவதற்கு ஏதுவாக 5 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.தோப்பு என்.டி.வெங்கடாசலம், தலைமைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. ச.வி. சங்கர், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப.,, கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் திரு.கே.ஸ்கந்தன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 1.3.2016